10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 23 வெள்ளிக்கிழமை மே 26 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## நொருங்கியது ஹெலி



நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஹெலிகப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் மீட்பு பணிக்கு சென்ற ஹெலிகப்டர் ஒன்று காலி, நெழுவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி உடைந்து விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பலர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## வெள்ளத்துள் சிக்கிய அமைச்சர்



அமைச்சர் லக்ஸ்மன் யாபா அபேவர்தன வெள்ளத்தில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மாத்தறை பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால் அமைச்சரின் வீடு பாதிக்கப்பட்டுள்ளது. அமைச்சரின் வீட்டுப் பகுதி 15 அடி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. அமைச்சரும், அவரது புதல்வருமான மாகாணசபை உறுப்பினருமான பசந்த யாபா அபேவர்தனவும் வீட்டில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீட்டின் மேல் பகுதிக்கு சென்று உதவி கோரியுள்ளதாகவும், ஹெலிகொப்டர் மூலம் அவர்களை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## அரச ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து

தற்போது ஏற்பட்டுள்ள இடர் அனர்த்தத்தின் காரணமாக அரசாங்க சேவையாளர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார். அதேவேளை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு இது ஏற்புடையது ஆகாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அனர்த்தம் காரணமாக அனைத்து அரச ஊழியர்களும் இடர் நிவாரண சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

### தொடர் மழை வெள்ளம் மண்சரிவு

# பேரனர்த்தம்!



**பலி—60: 100 பேரைக் காணோம்**

கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் ,மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 60 பேர் பலியாகியுள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். குறிப்பாக இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலே இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

புளத்சிங்கள போகஹாவத்த பகுதியில் 9 பேர் பலியானதுடன் நான்கு பேர் காணாமல் போயுள்ளனர். மேலும், தீவலகட பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் எட்டுப் பேரைக் காணவில்லை. களுத்துறை, பதுரெலிய பகுதியில் நிகழ்ந்த மண்சரிவில்,

04

## திருமலையில் போராட்டம்



அகில இலங்கை பொது மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று திருகோணமலை நகர மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் இடம்பெற்றது. டைனமைட் உள்ளிட்ட நாசத்தை உண்டாக்கும் சாதனங்களை நிறுத்துவதற்கு உடனடியாகத் தலையிட வேண்டு எனும் கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## மயான சுற்றுமதில் இடித்தழிப்பு



**புத்தூர் மேற்கில் நேற்றிரவு சம்பவம்**

புத்தூர் மேற்கு கிந்துசிட்டி கிராமத்தில் அமைந்துள்ள மயானம் தொடர்பில் இரு கிராமங்களிற்கிடையில் முரண்பாடு நிலவிவருகின்றது. இந்நிலையில் நீதிமன்ற உத்தரவில் மயானத்தில் கட்டப்பட்டுவந்த சுற்றுமதில் நேற்று இரவு இனந்தெரியாத நபர்களால் இடித்து வீழ்த்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களிற்கு முன்னர் மதில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுவந்தவர்கள் மீது சிலரால் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று இரவு சுற்று மதில் இடிக்கப்பட்டுள்ளது. (எ-01)

## ஏழு கோடி ரூபா செலவில்

### வல்வெட்டித்துறையில் நீச்சல் தடாகம்



வல்வெட்டித்துறையின் சாதனையாளர் ஆழிக்குமரன் ஆனந்தன் ஞாபகார்த்தமாக நீச்சல் தடாகம் அமைக்கப்படவுள்ளது. இதற்கென விளையாட்டுத்துறை அமைச்சு ஏழு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று முற்பகல் 9.30 மணியளவில் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலர், ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீர, விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரிஷ், அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரன், அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாண சபை உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து, மகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-1)

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

நாடாளுமன்ற நடவடிக்கை இன்று பிற்பகல் 2 மணி முதல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அனர்த்த சூழலையடுத்து, அவசரமாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடி கலந்துரையாடியுள்ளனர். இதனையடுத்து சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து அனர்த்த நிலமைகளைப் பார்வையிட பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### தகவல் அறியும் சட்டம் ஜனாதிபதி செயலகத்தால்

## நிராகரிப்பு

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக விண்ணப்பித்த விண்ணப்பங்கள் ஜனாதிபதி செயலகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் தகவல்களை வழங்குமாறு கோரி முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த மூன்று தாய்மார் ஜனாதிபதி செயலகத்திற்கு விண்ணப்பம் செய்திருந்தனர். விண்ணம் தொடர்பான தகவல்களை தம்மால் பெறமுடியாதுள்ளதால் குறித்த விண்ணப்பத்தை நிராகரிப்பதாக ஜனாதிபதி செயலகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில் 14 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## எதிரானவர்களை முடக்கியது எகிப்து




அரசுக்கு எதிராக தீவிரவாதம் மற்றும் பொய்யான செய்திகளை பரப்புகின்றன எனக் கூறி எகிப்து நாட்டில் முக்கிய ஊடக இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

எகிப்து அரசின் கொள்கைகளுக்கு எதிராகவும், தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாகவும் செய்திகள் வெளியிட்ட தாகக் கூறி கட்டாரின் அல்-ஜசீரா செய்தி தொலைக்காட்சி சேவை உள்ளிட்ட 21 ஊடக இணையத்தளங்களையே எகிப்து அரசு முடக்கியுள்ளது.

எகிப்து அரசின் இந்த நடவடிக்கைக்கு ஊடகங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# "உங்களோட தொந்தரவாப் போச்சு"



மான்செஸ்டர் குண்டு வெடிப்பின் புகைப்படங்கள் அமெரிக்க ஊடகங்களில் வெளியானதால் இங்கிலாந்து அதிருப்தி தெரிவித்திருந்தது. இதனால், சம்பந்தப்பட்ட ஊடகங்களுக்கு அதிபர் டிரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பின் போது அந்த இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை அமெரிக்க ஊடகமான நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டது.

இதனால், அதிருப்தியடைந்த இங்கிலாந்து, விசாரணை நடைபெறும் போது இத்தகைய செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது எனவும், "இது அமெரிக்காவின் நம்பிக்கைத் துரோகம்" எனவும் கடுமையாக விமர்சித்துள்ளது.

மேலும், இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் இந்தப் புகைப்படங்களை பார்க்கும் போது மீண்டும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாவார்கள் என தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தின் குற்றச்சாட்டால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடும் கோபமடைந்துள்ளார். நடைபெற்ற சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துள்ள டிரம்ப், ஊடகங்களின் இந்தச் செயல்கள் மிகுந்த தொந்தரவாக இருக்கிறது எனவும் சாடியுள்ளார்.

## புலம்பெயர்ந்தோரை எப்படி மதிக்கிறார்கள்?

பிரித்தானியாவுக்கு புலம்பெயர்பவர்கள் மற்றும் அந்நாட்டின் பிரச்சினைகள் குறித்து பொது மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கான முடிவுகள் வருமாறு:

- இனவாத சிறுபான்மையினரால் உள்ளூர் கலாசாரத்துக்கு அச்சுறுத்தல் உள்ளது என 56 சதவீதம் பேர் கூறியுள்ளார்கள்.
- புலம்பெயர்பவர்கள் வேலை வாய்ப்புகளை அதிகம் எடுத்துக் கொள்கின்றனர். (24 சதவீதம் பேர் கருத்து)
- புலம்பெயர்பவர்கள் சமுதாயத்துக்கு பங்களித்ததை விட, அனுபவித்த விடயங்களே அதிகம் (34 சதவீதம் பேர் கருத்து).
- இனிவரும் காலத்தில் அகதிகளை எதிர்கொள்ளும் திறன் பிரித்தானியாவில் குறையும்.
- பிரித்தானிய பிரதமர் தெரசா மே அகதிகளின் நெருக்கடி பிரச்சனையை தீர்த்து வைப்பார் (15 சதவீதம் பேர் கருத்து).
- கட்டாய குடியேற்றமும், பசி பட்டினியும் முக்கியமான விடயங்களாக மக்களால் பார்க்கப்படுவதும் தெரியவந்துள்ளது.
- மான்செஸ்டர் தாக்குதல் நடைபெறும் முன்னர் எடுக்கப்பட்ட இந்த ஆய்வில், பயங்கரவாதம் தான் மனித இனத்துக்கு மிகப் பெரிய சவாலான விடயம் என மக்கள் கூறியிருந்தமை முக்கிய விடயமாக பார்க்கப்படுகிறது.

## மரணம்!



முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மரணம் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கரணாநாயக்கவின் பெயரில் உள்ள போலி டுவிட்டர் கணக்கில் மர்ம நபர்கள் விஷமமாகப் பதிவு செய்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



## அத்தையின் சொத்துக்கு முந்திக்கொள்ளும் மருமகள்

என் அத்தைக்கு சொந்தமான, அனைத்து விதமான பூர்வீக சொத்துக்களை முறைப்படி பராமரிக்கும் உரிமை எனக்கும், சகோதரர் தீபக்குக்கும் மாத்திரமே உள்ளது என்று எம்.ஜி.ஆர். அம்மா தீபா பேரவை பொது செயலாளர் ஜெ.தீபா கூறியுள்ளார்.

எம்.ஜி.ஆர். அம்மா தீபா பேரவை பொது செயலாளர் ஜெ.தீபா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

புரட்சித் தலைவி வாழ்ந்த போயஸ் தோட்ட இல்லத்தை திடீர் ஞானோதயமாக நினைவு இல்லமாக மாற்றப் போவதாக அமைச்சரவை கூடி தீர்மானம் நிறைவேற்றியிருப்பது தொண்டர்களை ஏமாற்ற அரசு செய்த போலி ஏமாற்று நாடகமே.

எனது பாட்டி காலத்தில் நாங்கள் அத்தையுடன் ஓடி விளையாடிய எங்கள் பூர்வீக இல்லத்திலிருந்து, இடையிலே புகுந்த சில சதிகாரர்களால் பிரித்து வைக்கப்பட்டோம் என அதில் மேலும் தெரிவித்துள்ளார்.

## சனத்தொகையில் இந்தியாவே முதலிடம்




உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு சீனா என பல ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையில் சீனாவை விட இந்தியாவில் தான் மக்கள்தொகை அதிகம் எனவும், இது பல ஆண்டுகளாக மறைக்கப்பட்டு வருகிறது எனவும் சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் விஸ்கோசின் பல்கலைக்கழகத்தில் மக்கள் தொகை குறித்த ஆராய்ச்சியாளராக இருக்கும் ஷி புசியான் என்பவரே சீனாவின் பல்கலைக்கழகம் ஒன்றில் நடந்த விழாவில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

### திக்கம் மத்திய சனசமூக நிலைய கரப்பந்தாட்டம்

# புத்தூர் கலைமதியை வீழ்த்தி சம்பியனானது ஆவரங்கால் மத்தி



### தொடர் நாயகனானார் வாகீசன்

திக்கத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது.

திக்கம் மத்திய சனசமூக நிலைய வைர விழாவையொட்டி நடத்தப்பட்டு வந்த கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் மற்றும் மூன்றாவது இடத்துக்கான போட்டிகள் நேற்று இரவு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நிலைய உப தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெற்றன.

இதில் முதலில் நடைபெற்ற மூன்றாவது இடத்துக்கான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற சுற்றுக் கணக்கில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழகத்தை வென்றது.

பின்னர் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 3:2 என்ற சுற்றுக் கணக்கில் புத்தூர் கலைமதியை வென்று சம்பியனானது.


இத்தொடரின் நாயகனாக கலைமதியின் வாகீசன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதி கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) க.சத்தியபாலனும் சிறப்பு விருந்தினர்களாக கனடா திக்கம் நலன்புரிச் சங்க தலைவர் சி.கணேசமூர்த்தியும் பருத்தித்துறை மின் அத்தியட்சர் கமலகோபனும் கலந்து சிறப்பித்தனர். (ஐ)

## முரளியுடன் ஆலோசிக்கும் திருவள்ளூர்

தமிழ்நாடு பிரீமியர் லீக்கில் திருவள்ளூர் வீரன்ஸ் அணியின் ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் நியமிக்கப்படவுள்ளார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் கடந்த வருடம் தமிழ்நாடு பிரிமீயர் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தொடருக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்புக் கிடைத்தது.





இந்நிலையில், இந்த வருடம் ஜூலை மாதம் இந்த தொடர் தொடங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு பிரிமீயர் லீக்கில் இடம்பிடித்துள்ள அணிகளில் வி.பி. திருவள்ளூர் வீரன்ஸ் அணியும் ஒன்று. இந்த அணி இலங்கை அணியின் ஜாம்பவான் முத்தையா முரளிதரனை ஆலோசகராக நியமிக்கத் தீர்மானித்துள்ளது.



## நான் பதவிக்காக அலைபவனல்ல

காணி அமைச்சராக நான் நியமனம் பெற்றுள்ளேன். திரைப்படக்கூட்டுதாபனம் அரச அச்சகம் உள்ளிட்ட வற்றை எனது அமைச்சின் கீழ் கொண்டு வருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. பதவிக்காக அலையும் நபர் நான் அல்லன். இதுவரை எந்தப் பதவியையும் கேட்டு வாங்கியதில்லை என்று காணி அமைச்சர் கஜந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார். (உ)

# இன்றைய கருத்தோவியம்



### திருமலையில்

## அமெரிக்க கடற்படைத்தளம்!

திருகோணமலை துறைமுகத்தை மையப் பகுதியாகக் கொண்டு அமெரிக்க கடற்படைத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், இதுதொடர்பான இரகசிய உடன்பாடு இலங்கை - அமெரிக்க அரசுகளுக்கு இடையில் செய்துகொள்ளப் பட்டுள்ளதாகவும் லங்கா சமசமாசக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். அமெரிக் காவிடம் இருந்து 400 மில் லியன் டொலர் செலவில் போர் விமானங்களையும் 300 மில்லியன் டொலர் இராணுவ தளபாடங்களையும்இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (உ)

## வேலைநிறுத்த போராட்டம்

ரயில் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 24 மணித்தியாலய வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளன. சம்பள நிர்ணயத்தை மீள்நிர்மாணம் செய்தல் மற்றும் ஒய்வூதியம் பெறும் வயதெல்லையை 63 வயது வரை அதிகரிக்குமாறு கோரியே ரயில் தொழிற் சங்கங்கள் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன. (ஊ)

## தென்னிலங்கையில் வெள்ளத்தில் மூழ்கிய குடியிருப்புகள்







நாட்டின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் தொடக்கம் இன்று வெள்ளிக்கிழமை காலை வரை தொடர்ச்சியாக பெய்த கடும் மழையால் குடியிருப்புகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன. அத்துடன் மண்சரிவினால் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

## செம்பீஸ்வரர் புத்தராம்

“திருகோணமலை, குச்சவெளி செம்பீஸ்வரர் ஆலய வளாகத்தில் கோவில் இருந்ததற்கான அடையாளம் இல்லை. விகாரையொன்று இருந்தமைக்கான அடையாளமே உள்ளது” என, கல்வி யமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். “திருகோணமலை, குச்சவெளி செம்பீஸ்வரர் ஆலய வளாகத்தில் சிவலிங்க மொன்று கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படுவதற்கும் அங்கு புராதன கோவிலொன்று இருந்ததற்கும் எவ்வித அடையாளங்களும் இல்லை” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஊ)

## சீரற்ற காலநிலை

### பாடசாலைகளுக்கு பூட்டு




சீரற்ற காலநிலை காரணமாக சப்ரகமுவ மாகாணத்தில் சகல பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. பல இடங்களிலும் வெள்ள அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே பாடசாலைகளை மூடுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உத்தரவிட்டுள்ளது. (உ)

## தங்க நகைகளா?

எனக்கு எதுவும் தெரியாது !

இறுதி யுத்தத்தில் முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான தங்கம் தொடர்பில் எந்த வித தகவலும் அரசாங்கத் திடம் கிடையாது என அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் வாசுதேவ நாணயக்கார எம்.பி. எழுப்பியுள்ள கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (உ)

## ஆபத்தில் அதிவேக நெடுஞ்சாலை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கொக்மாதுவ பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் வீதிக்கு குறுக்காக வெள்ளம் பாய்வதாக கூறப்படுகின்றது. எனவே அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தும் போது மணிக்கு 60 கிலோ மீற்றருக்கு உட்பட்ட வேகத்தில் வாகனத்தை செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை சாரதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. (ஊ)

### வாகனத் திருட்டு

## சிக்கினார் இலங்கையர்

ஜப்பான், டோக்கியோ நகரில் வாகனம் திருடிய இலங்கை இளைஞர் தொடர்பில் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வீடொன்றில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஜீப் வண்டியை, குறித்த இலங்கை இளைஞர் சூட்சுமமான முறையில் திருடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த இளைஞர் திருட சென்ற காட்சி அந்த இடத்தில் பொருத்தப் பட்டிருந்த சீ.சீ.டீ.வி கமராவில் பதிவாகியுள்ள நிலையில், அவர் அடையாளம் காணப்பட் டுள்ளார். (உ)

### அரசியல் கைதிகளின் விவரம்

## வெளியிடக் கோரிக்கை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகளின் விவரங்களை வழங்குமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தகவல் அறியும் சட்டத்தின் மூலமாக குறித்த விவரங்களை வழங்குமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது. (உ)

## பேச்சு

ஒன்றிணைந்த எதிரணியுடன் இணைந்து செயற்படுவது குறித்து மகிந்த ராஜபக்சவுடன் பேச்சு நடத்தியதாக தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. பேச்சின் போது சில விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் வர்ண குலசிங்கம் கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

### தமிழ் படும் பாடு...




கொழும்பில் தமிழை கொச்சைப்படுத்தும் வகையில் பொலிஸ் வாகனத்தில் தமிழ் எழுத்துக்கள்.

## நாளை நாளும் கோளும்

27.05.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 13ஆம் நாள்

**துதியை மு.இ. 09.19 வரை** **மிருகசீரிடம் மு.இ. 09.46 வரை** **சித்தயோகம்**

**இராகுகாலம் 08.52-10.22** **சுபநேரம் 02.52-04.22** **எமகண்டம் 01.22-02.52**

**கொடியேற்றம்**
கோண்டாவில் மேற்கு உப்புமடம் சந்திரசேகரப்பிள்ளையார்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதரவு | சிக்கல் | சிரமம் | அசதி | லாபம் | செலவு | சுகம் | கவலை | வெற்றி | நன்மை | பயம் | விருத்தி |

எதிரொலி
Ethiroli

# மீனவர் பாதிப்பு

முல்லைத்தீவு கடற்பரப்பில், சட்டவிரோத மீன்பிடி அதிகரித்துள்ளதால் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் கடற்தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார். கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் ஜனாதிபதி தொடக்கம், அனைவருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும், முன்னெடுக்கப் பட வில்லை என கவலைவெளியிட்டுள்ளார். (எ)

## பட்டப்பகலில் வங்கியில் கொள்ளை

மீரிகம தனியார் வங்கியில் இன்று நண்பகல் நுழைந்த திருடர்கள் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு தப்பிச்சென்றுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், ரி56 ரக துப்பாக்கியைக் காட்டி பணியாளர்களை அச்சுறுத்தி கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## சிற்ப கண்காட்சி

திருமறைக் கலாமன்ற மாணவர்களின் சிற்பக் கண்காட்சி நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக்கூடத்தில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இம்மாண வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

# அந்த நாள் ஞாபகம்.....!



## 1987.05.26

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இலங்கை ஆயுதப்படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் ராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. இதன் மூலம் வடமராட்சி பகுதியை இலங்கை இராணுவம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

## சிறுவர் நாடகம்

'சிறுவர்கள் சமூக ஒருமைப்பாட்டின் முகவர்களாகிறார்கள்' என்னும் கருப்பொருளில் பல்லின சிறுவர்களின் நாடகம், நடனங்கள் நடைபெறவுள்ளன. நாளை மாலை 6 மணிக்கு கல்லூரி வீதி, இளவாலையில் அமைந்துள்ள இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலைக் கல்லூரியில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ)

# வீட்டுக்குள் சிக்கிய 15 சிறுசுகள்

காலியில் ஹினிதுக, நுககஹ பிரதேசத்தில் ஆபத்தான நிலையில் வீடொன்றுக்குள் 15 சிறுவர்கள் சிக்கியுள்ளனர்.

அந்த வீட்டை நெருங்க முடியாத அளவு வெள்ளம் நிரம்பியுள்ளது. வீட்டில் சிக்கியுள்ள நபர் ஒருவர் ஊடகமொன்றுக்கு தொலைபேசி ஊடாக தானும், 15 சிறு பிள்ளைகளும் நேற்று மாலை முதல் இவ்வாறு ஆபத்தில் சிக்கியுள்ளதாக தகவல் தெரிவித்துள்ளார்.எனினும் அவர்கள் இதுவரை மீட்கப்படவில்லை. (அ)



## உறுதிமொழி

வடக்குப் பாடசாலைகளில் பிளாஸ்ரிக் பைகளைத் தவிர்ப்பதற்கான உறுதிமொழி எடுக் கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சு தக வல் வெளியிட்டுள்ளது. ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்படுகின்றது. அதன் ஒரு அங்கமாக எல்லா வகையான பிளாஸ்ரிக் பைகளையும் ஒரு நாள் பயன் படுத்தி விட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருட்களையும் தவிர்ப்பதற்கான உறுதி மொழி மே 29 ஆம் திகதி எடுக்கப் படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

## கௌரவிப்பு

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா நாளை மாலை 5 மணிக்கு சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வானது சனசமூக நிலைய தலைவர் க.தர்சன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இதன் போது புதிய நிர்வாகத் தேர்வும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (எ)

## முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை ஒத்திவைப்பு

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவிருந்த அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் 111 க்கான பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தம் காரணமாக குறித்த பரீட்சைகள் ஒத்திவைக் கப்படுவதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

இந்த பரீட்சையில் 93ஆயிரத்து 952 பரீட் சார்த்திகள் தோற்ற இருந் தமை குறிப்பிடத்தக்கது. இப் பரீட்சைக்காக நாடு முழுவதிலும் 658 மத்திய நிலையங்களில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (எ)

## 14 வருடங்களின் பின் மோசமான காலநிலை

2003ஆம் ஆண்டிலும் பார்க்க மிக மோசமான பாதிப்பு தற்போதைய கடும் மழையினாலும் வெள்ளப் பெருக்காலும் ஏற்பட்டுள்ளது என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

14 ஆண்டுகளுக்குப் பின்னர் மிக மோசமான காலநிலையாக இதனை உணர்கின்றோம். அனர்த்தம் காரணமாக இதுவரை 60 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். தென்மாகாணம் முழுவதும் அனர்த்த நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## கிரிக்கெட், மரதன் விண்ணப்பம் கோரல்

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தவுள்ள அணிக்கு 6 பேர் கொண்ட 5 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்கேற்க விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் வீரர்கள் 0776329783, 0778388834 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

# நவிண்டில் உதைபந்தாட்டம் யங்கம்பன்ஸ் முன்னேற்றம்



உரும்பிராய் சென்.மைக்கல் அணியை வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி.

நவிண்டில் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் முதலாவது போட்டியில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து சென்.மைக்கல் அணி மோதியது.

இதன் முதற்பாதியாட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் சென்.மைக்கல் அணி வீரர் கொமறோ கோல் ஒன்றைப் போட்டு 1:0 என்ற கோல் கணக்கில் அணியை முன்னிலைப்படுத்தினார்.

பிற்பாதியாட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் எதிரணி வீரர் நிரோஜன் பதில் கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார்.

பின்னர் தொடர்ந்து 36, 37ஆவது நிமிடங்களில் பிரகாஷ் இரண்டு கோல்களைப் போட்டு யங்கம்பன்ஸ் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

ஆட்ட நேர முடிவில் 3:1என்ற கோல் அடிப்படையில் யங்கம்பன்ஸ் அணி வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (ஐ -23)

## ஹெலியிலிருந்து தவறிவிழுந்த சிப்பாய் படுகாயம்

காலி நெலுவ பிரதேசத்தில் தூரிஎல தோட்டத்தைக் கடந்து பயணித்த ஹெலிகொப்டரில் இருந்து ஒருவர் தவறிவிழுந்த இராணுவச் சிப்பாய் படுகாய மடைந்துள்ளார். இன்று காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சுமார் 25 அடி உயரத்திலிருந்து மீட்புப் பணியில் குறித்த ஹெலிகொப்டர் ஈடுபட்டிருந்தது. இந் நிலையில் கயிற்றினால் கீழிறங்கி வெள்ளத்தில் சிக்கிய நபரை இராணுவச் சிப்பாய் மீட்டதாகவும், அதன் போது அவர் தவறி விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வாசகர் கவனத்துக்கு...

**உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே "எதிரொலி"யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவே அனுப்பிவைக்கலாம்.**

## பேரனர்த்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட 37 பேர் பலியாகியுள்ளனர்.

சப்புகஸ்கந்தையில் மதில் சுவரொன்று சரிந்து விழுந்ததில் இரண்டு பெண்கள் கொல்லப்பட்டனர். மண்சரிவில் ஒருவர் பலியாகியுள்ளார். இரத்தினபுரியில் 10 பேர் பலியாகியுள்ளனர்.அவிசாவளையில் ஏற்பட்ட மணிசரிவில் இரு மாணவர்கள் பலியாகியுள்ளனர்.இத்தகவல்கள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்ட அறிக்கையினை அடிப்படையாக வைத்துப் பெறப்பட்டவை. எனினும் உயிரிழப்புகள் இதனை விட அதிகமாக இருக்கும் என அஞ்சப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.